செய்தி வெளியீட்டு எண்.55 நாள்.25.01.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 7-வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் மாணவ – மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புண்ர்வு மினி மாராத்தான், விழிப்புணர்வு பேரணி மற்றும் கலைநிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

----------

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 7-வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் மாணவ – மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புண்ர்வு மினி மாராத்தான், விழிப்புணர்வு பேரணி மற்றும் கலைநிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.01.2017) துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது: “திருவள்ளூர் மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது. தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு மினி மாராத்தான், பேரணி மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பள்ளி மாணவ – மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. இந்த தினத்தின் நோக்கம் வாக்களராக இருப்பதில் பெருமை கொள்வோம், தேர்தலில் வாக்களிக்க தயராக இருப்போம் என்பதாகும்” என்று கூறினார்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு மினி மாராத்தான் போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்போட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் புல்லரம்பாக்கம் காவல் நிலையம் வரை நடைபெற்றது.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. இப்பேரணியில் கலந்து கொண்ட மாணவ – மாணவிகள் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பலகைகளை கையிலேந்தி சென்றனர்.

இறுதியாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள் கலந்து கொண்ட நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, பாட்டு, சைகை (MIME) ஆகிய கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.பெரியசாமி, தேர்தல் வட்டாட்சியர் திரு.கணேசன், திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி.கார்க்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**